# ٱلْقَوَاعِدُ ٱلْأَرْبَعُ

# நான்கு சட்டங்கள்

ஷைய்குல் இஸ்லாம் முஹம்மது
இப்னு சுலைமான் அத்தமீமி
رحمه الله

தமிழாக்கம்:
முஹம்மத் அஸ்லம் மதனி

Islam Tamil
இஸ்லாம் தமிழ்

# القواعد الأربع

لشيخ الإسلام محمد التميمي (r)

# நான்கு சட்டங்கள்

அல்-இமாம் முஹம்மத் அத்-தமீமீ ரஹிமஹுல்லாஹ்

**ஒவ்வொரு முஸ்லிமும் கட்டாயம் கற்க வேண்டிய நான்கு முக்கியமான சட்டங்கள்**

**தமிழாக்கம்**

**முஹம்மது அஸ்லம்**

# புத்தக விபரத் தொகுப்பு

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நான்கு சட்டங்கள் |
| மூல மொழி | : | அரபி மொழி |
| தமிழாக்கம் | : | முஹம்மது அஸ்லம் |
| முதல் பதிப்பு | : | ஹிஜ்ரி 1445 (2024) |
| பக்கங்கள் | : | 20 |
| வெளியிட்டோர் பதிப்பகம் | : | இஸ்லாம் தமிழ் |

© Copyrights

இஸ்லாம் தமிழ் பதிப்பகம்

All Rights Reserved

**அன்பளிப்பு விற்பனைக்குரியதல்ல**

# நான்கு சட்டங்கள்

أَسْأَلُ اللَّهَ الكَرِيمَ، رَبَّ العَرْشِ العَظِيمِ: أَنْ يَتَوَلَّاكَ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ، وَأَنْ يَجْعَلَكَ مُبَارَكاً أَيْنَمَا كُنْتَ. وَأَنْ يَجْعَلَكَ مِمَّنْ إِذَا أُعْطِيَ شَكَرَ، وَإِذَا ابْتُلِيَ صَبَرَ، وَإِذَا أَذْنَبَ اسْتَغْفَرَ؛ فَإِنَّ هَؤُلَاءِ الثَّلَاثَ عُنْوَانُ السَّعَادَةِ.

மகத்துவமிக்க அர்ஷுடைய ரட்சகனும் பெருங்கொடையாளனுமாகிய அல்லாஹ்விடம் நான் வேண்டி கேட்கிறேன்: "இவ்வுலகிலும் மறுமையிலும் அவன் உனக்கு பொறுப்பேற்றுக் கொள்வானாக, நீ எங்கிருந்தாலும், உன்னை பரக்கத் பொருந்தியவராக (நன்மையில் நிலைத்திருக்கக் கூடியவராக) ஆக்குவானாக".

"(அருள் வளங்கள்) கொடுக்கப்பட்டால் அதற்கு நன்றி செலுத்துபவராகவும், சோதிக்கப்பட்டால் அதை பொறுத்துக் கொள்பவராகவும், பாவம் செய்தால் பாவமன்னிப்புத் தேடுபவராகவும் அல்லாஹ் உன்னை ஆக்குவானாக". நிச்சயமாக இம்மூன்றும் மகிழ்ச்சியை அடைவதற்கான வழிகளாகும்.

اعْلَمْ أَرْشَدَكَ اللهُ تَعَالَى لِطَاعَتِهِ أَنَّ الحَنِيفِيَّةَ مِلَّةَ إِبْرَاهِيمَ: أَنْ تَعْبُدَ اللهَ وَحْدَهُ مُخْلِصًا لَهُ الدِّينَ، وبذلك أَمَرَ اللهُ جَمِيعَ النَّاسِ، وَخَلَقَهُم لَهَا، كَمَا قَالَ تَعَالَى:

அல்லாஹ் தனது கீழ்ப்படிதலின்பால் உனக்கு நேர்வழி காட்டுவானாக, அறிந்துகொள்: இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மார்க்கமான ஹனீஃபிய்யா என்பது, மார்க்கத்தை முற்றிலும் கலப்பற்ற நிலையில் அல்லாஹ்விற்கே உரித்தாக்கி, (அவனோடு யாரையும் இணை வைக்காமல்) அவனை மட்டுமே

தனித்து வணங்குவதாகும். இதையே அல்லாஹ் அனைத்து மக்களுக்கும் கட்டளையிட்டுள்ளான், மேலும் இதற்காகவே அவர்களைப் படைத்தான். உயர்ந்தோனாகிய அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான்:

﴿وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ﴾ [الذاريات: ٥٦]

மேலும் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே அன்றி (வேறு எதற்காகவும்) நான் படைக்கவில்லை.

فَإِذَا عَرَفْتَ أَنَّ اللَّهَ خَلَقَكَ لِعِبَادَتِهِ؛ فَاعْلَمْ أَنَّ الْعِبَادَةَ لا تُسَمَّى عِبَادَةً إِلَّا مَعَ التَّوْحِيدِ، كَمَا أَنَّ الصَّلَاةَ لَا تُسَمَّى صَلَاةً إِلَّا مَعَ الطَّهَارَةِ، فَإِذَا دَخَلَ الشِّرْكُ فِي الْعِبَادَةِ فَسَدَتْ كَالْحَدَثِ إِذَا دَخَلَ فِي الطَّهَارَةِ أَفْسَدَهَا، كَمَا قَالَ تَعَالَى:

ஆகையால், அல்லாஹ் உன்னைத் தன்னை வணங்குவதற்கே படைத்தான் என்பதை நீ அறிந்து கொண்டால், இதையும் நன்கு அறிந்துகொள்: எவ்வாறு தூய்மை (வுது) இன்றி தொழும் தொழுகையை, தொழுகை என்று அழைக்கப்படாதோ, அதேபோல தவ்ஹீத் இல்லாமல் செய்யப்படும் எந்த வணக்கமும் (இபாதத்) வணக்கமே ஆகாது.

தூய்மையை முறிக்கும் காரியங்கள் (எ.கா: காற்று பிரிதல்) ஒருவரின் தூய்மையை எவ்வாறு செயலற்றதாக்கி விடுகிறதோ, அதேபோல, இணைவைப்பு (என்னும் அசுத்தம்) ஒரு வணக்கத்தில் கலந்துவிட்டால், அந்த வணக்கத்தை முற்றிலும் பாழாக்கிவிடும்.

உயர்ந்தோனாகிய அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான்:

﴿مَا كَانَ لِلْمُشْرِكِينَ أَن يَعْمُرُوا مَسَاجِدَ اللَّهِ شَاهِدِينَ عَلَى أَنفُسِهِم بِالْكُفْرِ أُولَئِكَ حَبِطَتْ أَعْمَالُهُمْ وَفِي النَّارِ هُمْ خَالِدُونَ﴾ [التوبة: ١٧]

இணைவைப்போர் தங்களுக்குத் தாங்களே நிராகரிப்பைக் கொண்டு சாட்சி கூறிக்கொள்பவர்களாக இருக்க, அல்லாஹ்வுடைய பள்ளிகளை நிர்வாகம் செய்ய இவர்களுக்கு எவ்வித உரிமையுமில்லை, அத்தகையோரின் செயல்கள் அழிந்து விட்டன, இன்னும், அவர்கள் நரக நெருப்பில் நிரந்தரமாக தங்கி இருப்பவர்கள். (ஸூரத்துத் தவ்பா-17).

فَإِذَا عَرَفْتَ أَنَّ الشِّرْكَ إِذَا خَالَطَ الْعِبَادَةَ أَفْسَدَهَا، وَأَحْبَطَ الْعَمَلَ، وَصَارَ صَاحِبُهُ مِنَ الْخَالِدِينَ فِي النَّارِ، عَرَفْتَ أَنَّ أَهَمَّ مَا عَلَيْكَ: مَعْرِفَةُ الشِّرْكِ الَّذِي هَذَا قَدْرُهُ عِنْدَ اللهِ؛ لعلَّ اللهَ أَنْ يُخَلِّصَكَ مِنْ هَذِهِ الشَّبَكَةِ، وَهِيَ الشِّرْكُ بِاللَّهِ الَّذِي قَالَ اللهُ تَعَالَى فِيهِ:

இணைவைப்பு வணக்கவழிபாட்டில் கலந்து விட்டால், அந்த வணக்கத்தைப் பாழாக்கி, செயலை வீணாக்கிவிடும் என்பதையும், அதனைச் செய்பவர் நரகத்தில் என்றென்றும் நிரந்தரமாகத் தங்குவார் என்பதையும் நீ அறிந்து கொண்டால்; அந்த இணைவைப்பைப் பற்றி அறிந்து கொள்வதுதான் உன் மீது இருக்கும் மிக முக்கியமான கடமையாகும். அதை அறிவதன் மூலமாக, அல்லாஹ்விடத்தில் மிகப்பெரிய பாவமாக இருக்கும் இணைவைத்தல் என்னும் வலையிலிருந்து அல்லாஹ் உன்னை விடுவிப்பானாக.

**அந்த இணைவைப்பைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:**

﴿إِنَّ اللَّهَ لَا يَغْفِرُ أَن يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَٰلِكَ لِمَن يَشَاءُ﴾ [النساء: ١١٦]

நிச்சயமாக, அல்லாஹ், தனக்கு இணைவைக்கப்படுவதை (மட்டும்) மன்னிக்கவே மாட்டான், மேலும் இதல்லாத மற்ற அனைத்து (பாவங்களை யும்) தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான். (ஸூரத்துன் நிஸா -116).

وَذَلِكَ بِمَعْرِفَةِ أَرْبَعِ قَوَاعِد، ذكَرَهَا اللهُ تَعَالَى فِي كِتَابِهِ.

**இந்த இணைவைப்பை, அல்லாஹ் தனது திருமறையில் குறிப்பிட்டிருக்கும் நான்கு சட்டங்களை அறிவதின் மூலமாக அறிந்து கொள்ள முடியும்.**

# (முதலாம் சட்டம்) الْقَاعِدَةُ الأُولَى

أَنْ تَعْلَمَ أَنَّ الكُفَّارَ الَّذِيْنَ قَاتَلَهُم رَسُولُ اللَّهِ ﷺ يُقِرُّونَ بِأَنَّ اللَّهَ تَعَالَى هُوَ الْخَالِقُ الرَّازِقُ الْمُحْيِي الْمُمِيتُ الْمُدَبِّرُ لِجَمِيعِ الأُمُورِ. وَأَنَّ ذَلِكَ لَمْ يُدْخِلْهُم فِي الإِسْلَامِ وَالدَّلِيلُ قَوْلُهُ تَعَالَى:

அல்லாஹ்வின் தூதர் ﷺ போர் புரிந்த அந்த இறை நிராகரிப்பாளர்கள், அல்லாஹ்வே அனைத்தையும் படைத்தவன், அவனே வாழ்வாதாரங்களை வழங்குபவன், அவனே உயிர்ப்பிப்பவன், அவனே மரணிக்கச் செய்பவன், மற்றும் அவனே அனைத்துக் காரியங்களையும் திட்டமிட்டு நிகழ்த்துபவன் என்பதை ஏற்றுக்கொண்டிருந்தார்கள் என்பதை நீ அறிந்துகொள்.

ஆனால் அது அவர்களை இஸ்லாத்திற்குள் நுழைய வைக்கவில்லை. அல்லாஹ் கூறுகிறான்:

﴿قُلْ مَن يَرْزُقُكُم مِّنَ ٱلسَّمَآءِ وَٱلْأَرْضِ أَمَّن يَمْلِكُ ٱلسَّمْعَ وَٱلْأَبْصَٰرَ وَمَن يُخْرِجُ ٱلْحَىَّ مِنَ ٱلْمَيِّتِ وَيُخْرِجُ ٱلْمَيِّتَ مِنَ ٱلْحَىِّ وَمَن يُدَبِّرُ ٱلْأَمْرَ ۚ فَسَيَقُولُونَ ٱللَّهُ ۚ فَقُلْ أَفَلَا تَتَّقُونَ﴾

[يونس: ٣١]

“வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவளிப்பவன் யார்? செவிப்புலன்களையும் பார்வைகளையும் (தன் கட்டுப்பாட்டில்) வைத்திருப்பவன் யார்? இறந்ததிலிருந்து உயிருள்ளதை வெளிப்படுத்துபவனும், உயிருள்ளதிலிருந்து இறந்ததை வெளிப்படுத்துபவனும் யார்? மேலும், அனைத்துக் காரியங்களையும் நிர்வகிப்பவன் யார்?” என (நபியே!) நீர் கேட்பீராக! அதற்கு அவர்கள் “அல்லாஹ்தான்!” என்று பதிலளிப்பார்கள். "அப்படியிருக்க, (இத்தகைய ஆற்றல்கள் கொண்டவனுக்கு நாம் இணைகற்பிக்கிறோம்

என்று) அல்லாஹ்வுக்கு நீங்கள் அஞ்சமாட்டீர்களா?” என்று (நபியே!) நீர் கூறுவீராக!(அல்குர்ஆன்: யூனுஸ் 10:31).

فَإِذَا عَرَفْتَ هَذِهِ الْقَاعِدَةَ، وَأَشْكَلَ عَلَيْكَ كَيْفَ أَقَرُّوا بِهَذَا، ثُمَّ تَوَجَّهُوا إِلَى غَيْرِ اللَّهِ يَدْعُونَهُ، فَاعْرِفِ الْقَاعِدَةَ الثَّانِيَةَ.

இந்த (முந்தைய) சட்டத்தை நீங்கள் அறிந்த பிறகு, நிராகரிப்பாளர்கள் (மேலே கூறப்பட்ட அனைத்தையும்) ஒப்புக்கொண்ட பிறகும், ஏன் அல்லாஹ் அல்லாத மற்றவர்களை அழைத்து பிரார்த்தித்தார்கள் என்பது உங்களுக்குக் குழப்பமாக இருந்தால், பின்வரும் இரண்டாம் சட்டத்தை அறிந்து கொள்வீராக.

# (இரண்டாம் சட்டம்) القاعدة الثانية

أَنَّ الْكُفَّارَ فِي زَمَنِ الرَّسُولِ الَّذِينَ قَاتَلَهُم كَانُوا يَعْبُدُونَ الْأَصْنَامِ لَا لِأَنَّهَا تَنْفَعُ وتَضُرُّ، بَلْ لأَجْلِ القربة والشَّفَاعَةِ فقط، وَهِيَ أَنَّهُم يَقُولُونَ: مَا دَعَوْنَاهُم وتوجهنا إليهم إلا لطلب القُرْبَةِ وَالشَّفَاعَةِ عِندَ اللَّهِ نُرِيدُ مِنَ اللَّهِ لَا مِنْهُم، وَلَكِنْ بشفاعتهم، فدليل القربة قوله تعالى:

இறைத்தூதர் ﷺ போரிட்ட அக்கால இறை நிராகரிப்பாளர்கள், சிலைகளை வணங்கினர். அவை தங்களுக்கு நன்மை செய்யும்

அல்லது தீங்கிழைக்கும் என்பதற்காக அல்ல. மாறாக, (அல்லாஹ்விடம்) தங்களுக்கு நெருக்கத்தை ஏற்படுத்தித் தரும் என்பதற்காகவும், தங்களுக்குப் பரிந்துரை செய்வார்கள் என்பதற்காகவுமே அவற்றை அவர்கள் வணங்கினார்கள்.

அந்நிராகரிப்பாளர்கள் கூறினார்கள்:

"அல்லாஹ்விடம் நெருக்கத்தைப் பெறுவதற்காகவும், (தங்களுக்காக) சிபாரிசு செய்வார்கள் என்பதற்காகவே அன்றி, நாங்கள் அவர்களை (சிலைகளை) அழைக்கவுமில்லை, அவர்களிடம் திரும்பவுமில்லை."

“நன்மைகளை அல்லாஹ்விடமிருந்தே எதிர்பார்க்கிறோம்; அவர்களிடம் (சிலைகளிடம்) இருந்து அல்ல. ஆயினும், அவர்களின் சிபாரிசின் மூலம் அல்லாஹ் அவற்றை வழங்குவான் என்று நம்புகிறோம்.” என்பார்கள்.

இவ்வாறு இவர்கள் இந்த அவ்லியாக்கலைக் கொண்டு நெருக்கத்தை தேடியதற்கு மறுப்பாக உயர்ந்தவனாகிய அல்லாஹ் கூறுகிறான்:

﴿وَٱلَّذِينَ ٱتَّخَذُوا مِن دُونِهِۦٓ أَوْلِيَآءَ مَا نَعْبُدُهُمْ إِلَّا لِيُقَرِّبُونَآ إِلَى ٱللَّهِ زُلْفَىٰٓ إِنَّ ٱللَّهَ يَحْكُمُ بَيْنَهُمْ فِى مَا هُمْ فِيهِ يَخْتَلِفُونَ ۗ إِنَّ ٱللَّهَ لَا يَهْدِى مَنْ هُوَ كَٰذِبٌ كَفَّارٌ﴾

[الزمر: ٣]

அவனல்லாதவற்றை உதவியாளர்களாக (அவ்லியாக்களாக) எடுத்துக்கொண்டவர்கள், ‘அவர்கள் அல்லாஹ்விடம் எங்களை மேலும் நெருக்கமாக்குவார்கள் என்பதற்காகவே அன்றி, நாங்கள் அவர்களை வணங்கவில்லை என்று (காரணம் கூறுகின்றனர்). அவர்கள் எதில் கருத்து வேறுபாடு கொள்கிறார்களோ அது குறித்து, நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கிடையே தீர்ப்பளிப்பான். எவன் (உண்மையை) மிக்க மறுக்கின்றவனாக, பொய்யனாக இருக்கிறானோ நிச்சயமாக

அல்லாஹ், அவனை நேர் வழியில் செலுத்தமாட்டான்”. (ஸூரத்து ஸுமர்-3).

ودليل الشفاعة قوله تعالى:

இவர்கள், இவ்வாறு இந்த அவ்லியாக்களைக் கொண்டு பரிந்துரையை தேடியதற்கு மறுப்பாக உயர்ந்தவனாகிய அல்லாஹ் கூறுகிறான்:

﴿وَيَعْبُدُونَ مِن دُونِ ٱللَّهِ مَا لَا يَضُرُّهُمْ وَلَا يَنفَعُهُمْ وَيَقُولُونَ هَٰٓؤُلَآءِ شُفَعَٰٓؤُنَا عِندَ ٱللَّهِ﴾

[يونس: ١٨]

அல்லாஹ்வையன்றி, தங்களுக்கு நன்மையோ தீமையோ செய்ய இயலாதவற்றை அவர்கள் வணங்குகின்றனர். மேலும், ‘இவர்கள் அல்லாஹ்விடத்தில் எங்களுக்காக சிபாரிசு செய்பவர்கள்’ என்று அவர்கள் கூறுகின்றனர்.” (அல்குர்ஆன்: யூனுஸ் 10:18).

وَكَمْ مِنْ مَوْضِعٍ فِي الْقُرْآنِ يَدُلُّ عَلَى هَذَا.

இன்னும், திருக்குர்ஆனில் இக்கருத்து எத்தனையோ இடங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

وَالشَّفَاعَةُ شَفَاعَتَانِ: شَفَاعَةٌ مَنْفِيَّةٌ، وَشَفَاعَةٌ مثبتة.

**பரிந்துரை (சிபாரிசு) இரண்டு வகைப்படும் அவை,**

1. **மறுக்கப்பட்ட பரிந்துரை**
2. **அனுமதிக்கப்பட்ட பரிந்துரை**

أ) فَالشَّفَاعَةُ الْمَنْفِيَّةُ: مَا كَانَتْ تُطْلَبُ مِنْ غَيْرِ اللَّهِ فِيمَا عَلَيْهِ إِلَّا اللَّهُ، وَالدَّلِيلُ قَوْلُهُ تَعَالَى:

- **மறுக்கப்பட்ட பரிந்துரை:** என்பது, அல்லாஹ்வின் அனுமதியின்றி செய்ய இயலாத பரிந்துரையை, அல்லாஹ் அல்லாத மற்றவர்களிடம் எதிர்பார்த்துக் கேட்பதாகும்.

இதற்கான ஆதாரம்:

﴿يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ أَنفِقُواْ مِمَّا رَزَقۡنَٰكُم مِّن قَبۡلِ أَن يَأۡتِيَ يَوۡمٞ لَّا بَيۡعٞ فِيهِ وَلَا خُلَّةٞ وَلَا شَفَٰعَةٞۗ وَٱلۡكَٰفِرُونَ هُمُ ٱلظَّٰلِمُونَ﴾ [البقرة: ٢٥٤].

ஈமான் கொண்டோரே! எந்தவித பேரமோ, நட்போ, சிபாரிசோ இல்லாத ஒரு நாள் வருமுன், நாம் உங்களுக்கு அளித்தவற்றிலிருந்து தர்மம் செய்யுங்கள். இன்னும் நிராகரிப்பவர்கள்தாம் அநியாயக்காரர்கள். (அல்குர்ஆன்: அல்பகரா 2:254).

ب) وَالشَّفَاعَةُ الْمُثْبَتَةُ: هِيَ الَّتِي تُطْلَبُ مِنَ اللَّهِ، وَالشَّافِعُ مُكْرَمٌ بِالشَّفَاعَةِ، وَالْمَشْفُوعُ لَهُ مَنْ رَضِيَ اللَّهُ قَوْلَهُ وَعَمَلَهُ بَعْدَ الإِذْنِ؛ كَمَا قَالَ تَعَالَى:

❖ **(அனுமதிக்கப்பட்ட) உறுதிப்படுத்தப்பட்ட பரிந்துரை:** இவை அல்லாஹ்விடத்தில் மட்டுமே எதிர்பார்த்து வேண்டுவதாகும். (இப்பரிந்துரைக்கு இரு நிபந்தனைகள் உள்ளது):

- பரிந்துரை செய்பவர் (அல்லாஹ்வால்) பரிந்துரைக்கும் கண்ணியத்தைப் பெற்றிருப்பார்.
  (இந்த தகுதி யாருக்கு உள்ளது என்பதை மறுமையில் தான் நமக்கு தெரிய வரும், ஏனெனில் அப்போது தான் அல்லாஹ் அவ்வந்தஸ்தை வழங்குவான்.)
- (அல்லாஹ்வின்) அனுமதிக்குப் பிறகு, யாருக்காகப் பரிந்துரை செய்யப்படுகிறதோ அவருடைய சொல்லையும் செயலையும் அல்லாஹ் பொருந்திக்கொண்டிருக்க வேண்டும். (அதாவது இணைவைப்பு என்னும் அசுத்தம் இல்லாமல் அவருடைய சொல்லும் செயலும் அமைந்திருக்க வேண்டும்.)

**உயர்ந்தோனாகிய அல்லாஹ் கூறுகிறான்:**

﴿مَن ذَا الَّذِي يَشْفَعُ عِندَهُ إِلَّا بِإِذْنِهِ﴾ [البقرة: ٢٥٥].

அவனுடைய அனுமதியின்றி அவனிடம் எவர்தான் பரிந்து பேச முடியும்? (ஸூரத்துல் பகரா-255).

فَإِذَا عَرَفْتَ هَذَا فَاعْرِفِ الْقَاعِدَةَ الثَّالِثَةَ.

இதை நீ அறிந்து விட்டால், இம்மூன்றாம் சட்டத்தையும் அறிந்து கொள்வீராக.

## (மூன்றாம் சட்டம்) الْقَاعِدَةُ الثَّالِثَةُ

أَنَّ النَّبِيَّ ﷺ ظَهَرَ عَلَى أُنَاسٍ مُتَفَرِّقِينَ فِي عِبَادَاتِهِم، مِنْهُم مَنْ يَعْبُدُ الْمَلَائِكَةَ، وَمِنْهُم مَنْ يَعْبُدُ الأَنْبِيَاءَ وَالصَّالِحِيْنَ، وَمِنْهُم مَنْ يَعْبُدُ الأَشْجَارَ وَالأَحْجَارَ، وَمِنْهُم مَنْ يَعْبُدُ الشَّمْسَ وَالْقَمَرَ، وَقَاتَلَهُم رَسُولُ اللَّهِ ﷺ وَلَمْ يُفَرِّقْ بَيْنَهُم، وَالدَّلِيلُ قَوْلَهُ تَعَالَى:

நபி ﷺ அவர்கள், வணக்க வழிபாடுகளில் பல்வேறுபட்டிருந்த மக்களிடையே தோன்றினார்கள். அவர்களில் சிலர் மலக்குமார்களையும், சிலர் நபிமார்கள் மற்றும் நல்லோர்களையும் (ஸாலிஹீன்களை), சிலர் மரங்கள் மற்றும் கற்களையும், இன்னும் சிலர் சூரியன் மற்றும் சந்திரனையும் வணங்குபவர்களாக இருந்தனர்.

ஆயினும், அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களை (அவர்கள் வணங்கியவற்றில்) எந்தவித வேறுபாடும் பார்க்காமல், அனைவருடனும் போரிட்டார்கள்.

இதற்கான ஆதாரம்:

﴿وَقَاتِلُوهُمْ حَتَّى لَا تَكُونَ فِتْنَةٌ وَيَكُونَ الدِّينُ كُلُّهُ لِلَّهِ﴾ [الأنفال: ٣٩].

அன்றியும் (இணைவைப்பு என்னும்) குழப்பம் நீங்கி மார்க்கம் அல்லாஹ்விற்கே ஆகும் வரை அவர்கள் (அனைவருடனும்) அறப்போர் புரியுங்கள். (ஸூரத்துல் அன்ஃபால் :39)

وَدَلِيْلُ الشَّمْسِ وَالْقَمَرِ قَوْلُهُ تَعَالَى:

**சூரியனையும் சந்திரனையும் அவர்கள் வணங்கியதற்கான ஆதாரம்:**

﴿وَمِنْ آيَاتِهِ اللَّيْلُ وَالنَّهَارُ وَالشَّمْسُ وَالْقَمَرُ لَا تَسْجُدُوا لِلشَّمْسِ وَلَا لِلْقَمَرِ وَاسْجُدُوا لِلَّهِ الَّذِي خَلَقَهُنَّ إِن كُنتُمْ إِيَّاهُ تَعْبُدُونَ﴾ [فصلت: ٣٧]

இரவும், பகலும், சூரியனும், சந்திரனும் அவனது அத்தாட்சிகளில் உள்ளவை. நீங்கள் சூரியனுக்கும் சந்திரனுக்கும் ஸஜ்தா செய்ய வேண்டாம். நீங்கள் அவனையே வணங்குபவர்களாக இருந்தால், அவற்றை படைத்தவனாகிய அல்லாஹ்விற்கே ஸஜ்தா செய்யுங்கள்." (அல்குர்ஆன்: ஃபுஸ்ஸிலத் 41:37).

وَدَلِيْلُ الْمَلَائِكَةِ قَوْلُهُ تَعَالَى:

**மலக்குகளை அவர்கள் வணங்கியதற்கான ஆதாரம்:**

﴿وَلَا يَأْمُرَكُمْ أَن تَتَّخِذُوا ٱلْمَلَٰٓئِكَةَ وَالنَّبِيِّينَ أَرْبَابًا﴾ [آل عمران: ٨٠]

"மேலும், மலக்குகளையும் நபிமார்களையும் (வணங்கப்படும்) ரப்புகளாக நீங்கள் ஆக்கிக்கொள்ளுங்கள் என்று அவர் உங்களுக்கு ஒருபோதும் கட்டளையிட மாட்டார்." (அல்குர்ஆன்: ஆல இம்ரான் 3:80).

وَدَلِيْلُ الأَنْبِيَاءِ قَوْلُهُ تَعَالَى:

**நபிமார்களை அவர்கள் வணங்கியதற்கான ஆதாரம்:**

﴿ وَإِذْ قَالَ ٱللَّهُ يَٰعِيسَى ٱبْنَ مَرْيَمَ ءَأَنتَ قُلْتَ لِلنَّاسِ ٱتَّخِذُونِى وَأُمِّىَ إِلَٰهَيْنِ مِن دُونِ ٱللَّهِ ۖ قَالَ سُبْحَٰنَكَ مَا يَكُونُ لِىٓ أَنْ أَقُولَ مَا لَيْسَ لِى بِحَقٍّ ۚ إِن كُنتُ قُلْتُهُۥ فَقَدْ عَلِمْتَهُۥ ۚ تَعْلَمُ مَا فِى نَفْسِى وَلَآ أَعْلَمُ مَا فِى نَفْسِكَ ۚ إِنَّكَ أَنتَ عَلَّٰمُ ٱلْغُيُوبِ مَا قُلْتُ لَهُمْ إِلَّا

﴿مَآ أَمَرْتَنِى بِهِۦٓ أَنِ ٱعْبُدُوا۟ ٱللَّهَ رَبِّى وَرَبَّكُمْ ۚ وَكُنتُ عَلَيْهِمْ شَهِيدًا مَّا دُمْتُ فِيهِمْ ۖ فَلَمَّا تَوَفَّيْتَنِى كُنتَ أَنتَ ٱلرَّقِيبَ عَلَيْهِمْ ۚ وَأَنتَ عَلَىٰ كُلِّ شَىْءٍ شَهِيدٌ إِن تُعَذِّبْهُمْ فَإِنَّهُمْ عِبَادُكَ ۖ وَإِن تَغْفِرْ لَهُمْ فَإِنَّكَ أَنتَ ٱلْعَزِيزُ ٱلْحَكِيمُ﴾ [المائدة: ١١٦ - ١١٨]

அன்றியும், அல்லாஹ் (மறுமை நாளில் ஈஸாவிடம்) “மர்யமுடைய மகன் ஈஸாவே! அல்லாஹ்வைத் தவிர என்னையும், என்னுடைய தாயையும் இரண்டு வணக்கத்திற்குரிய கடவுளாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று மனிதர்களுக்கு நீர் கூறினீரா?” என்று கேட்பான்.

(அதற்கு) “நீ மிகப்பரிசுத்தமானவன், எனக்கு ஒரு சிறிதும் உரிமை இல்லாததை நான் (ஒருபோதும்) கூறுவதற்கு எனக்குத் தகுதி இல்லை என்று (ஈசா) கூறினார்.

நீ எனக்கு ஏவிய, “என் இறைவனும் உங்கள் இறைவனுமாகிய அல்லாஹ்வை வணங்குங்கள்” என்பதைத் தவிர (வேறு எதையும்) அவர்களுக்கு நான் கூறவில்லை. நான் அவர்களுடன் இருந்தவரை அவர்கள் மீது சாட்சியாளனாக இருந்தேன். நீ என்னைக் கைப்பற்றியபோது நீதான் அவர்களைக் கண்காணிப்பவனாக இருந்தாய். நீயே எல்லாவற்றின் மீதும் சாட்சியாளன்.

(இரட்சகா) “அவர்களை நீ வேதனை செய்தால், நிச்சயமாக அவர்கள் உன்னுடைய அடியார்களே! அன்றியும், அவர்களை நீ மன்னித்துவிட்டால், நிச்சயமாக நீதான் ( அனைத்தையும்) மிகைத்தோன்(மிகைத்தவன்), தீர்க்கமான அறிவுடையோன் (அறிவுடையவன்).” என்றும் கூறுவார். (ஸூரத்துல் மாஇதா: 116 - 118).

**وَدَلِيلُ الصَّالِحِينَ قَوْلُهُ تَعَالَى:**

**நல்லோர்களை அவர்கள் அழைத்து வணங்கியதற்கான ஆதாரம் உயர்ந்தோன் ஆகிய அல்லாஹ்வின் கூற்று:**

﴿قُلِ ٱدْعُوا ٱلَّذِينَ زَعَمْتُم مِّن دُونِهِۦ فَلَا يَمْلِكُونَ كَشْفَ ٱلضُّرِّ عَنكُمْ وَلَا تَحْوِيلًا أُولَٰٓئِكَ ٱلَّذِينَ يَدْعُونَ يَبْتَغُونَ إِلَىٰ رَبِّهِمُ ٱلْوَسِيلَةَ أَيُّهُمْ أَقْرَبُ وَيَرْجُونَ رَحْمَتَهُۥ وَيَخَافُونَ عَذَابَهُۥٓ ۚ إِنَّ عَذَابَ رَبِّكَ كَانَ مَحْذُورًا﴾ [الإسراء: ٥٦ - ٥٧].

(நபியே!) நீர் கூறுவீராக: “அல்லாஹ்வையன்றி (வேறு யாரை வணக்கத்திற்குரியவர்களாக) நீங்கள் கருதிக் கொண்டிருக்கிறீர்களோ, அவர்களை (உங்கள் துன்பங்களை நீக்க) அழையுங்கள்! (அவ்வாறு அழைத்தால்) உங்களை விட்டு எந்தத்

துன்பத்தையும் நீக்கவோ, மாற்றவோ அவர்கள் சக்தி பெற்றிருக்க மாட்டார்கள். இவர்கள் யாரை அழைக்கிறார்களோ, அவர்களே தங்கள் இறைவனிடம் நெருக்கமானவர் யார் என்பதற்காக வஸீலாவைத் தேடுகிறார்கள்; மேலும் அவனது அருளை ஆதரவு வைக்கிறார்கள்; அவனது வேதனைக்குப் பயப்படுகிறார்கள்.

நிச்சயமாக உன் இறைவனின் வேதனை அஞ்சத்தக்கதாகவே இருக்கிறது. (அல்குர்ஆன்: அல்-இஸ்ரா 17:56-57).

**وَدَلِيلُ الْأَشْجَارِ وَالْأَحْجَارِ قَوْلُهُ تَعَالَى:**

**மரங்கள் மற்றும் கற்களை அவர்கள் வணங்கியதற்கான ஆதாரம்:**

﴿أَفَرَءَيْتُمُ ٱللَّٰتَ وَٱلْعُزَّىٰ ۞ وَمَنَوٰةَ ٱلثَّالِثَةَ ٱلْأُخْرَىٰٓ﴾ [النجم: ١٩ – ٢٠]

“(நபியே!) நீங்கள் (வணங்கும்) லாத்தையும், உஸ்ஸாவையும் பார்த்தீர்களா?

மேலும், மூன்றாவதான மற்றொன்றான மனாத் (என்னும் சிலையைப்) பற்றியும் சிந்தித்தீர்களா?” (அல்குர்ஆன்: அந்-நஜ்ம் 53:19-20).

وَحَدِيْثُ أَبِي وَاقِدِ اللَّيْثِي رضي الله عنه قَالَ: «خَرَجْنَا مَعَ رَسُولِ اللَّهِ ﷺ إِلَى حُنَيْنٍ وَنَحْنُ حُدَثَاءُ عَهْدٍ بِكُفْرٍ، وَلِلْمُشْرِكِينَ سِدْرَةٌ، يَعْكُفُونَ عِنْدَهَا وَيَنُوطُونَ بِهَا أَسْلِحَتَهُمْ، يُقَالُ لَهَا: ذَاتُ أَنْوَاطٍ فَمَرَرْنَا بِسِدْرَةٍ فَقُلْنَا: يَا رَسُولَ اللَّهِ! اجْعَلْ لَنَا ذَاتَ أَنْوَاطٍ كَمَا لَهُمْ ذَاتُ أَنْوَاطٍ. فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ: اللَّهُ أَكْبَرُ إِنَّهَا السُّنَنُ، قُلْتُمْ وَالَّذِي نَفْسِي بِيَدِهِ، كَمَا قَالَتْ بَنُو إِسْرَائِيلَ لِمُوسَى: ﴿يَٰمُوسَى ٱجْعَل لَّنَآ إِلَٰهًا كَمَا لَهُمْ ءَالِهَةٌ﴾ لَتَرْكَبُنَّ سَنَنَ مَنْ كَانَ قَبْلَكُمْ الحديث.

நபித்தோழர் அபூ வாகித் அல்-லைஸி (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்கள்:

நாங்கள் நபி ﷺ அவர்களுடன் ஹுனைன் போர்க்களத்தை நோக்கிப் புறப்பட்டோம். நாங்கள் இறை நிராகரிப்பிலிருந்து புதிதாக இஸ்லாத்திற்கு வந்திருந்த காலம் அது. (அப்போது) இணைவைப்பாளர்களுக்கென ஒரு இலந்தை மரம் இருந்தது; அதன் அருகே அவர்கள் தங்கி (இஃதிகாஃப் இருந்து) வணக்கம் செலுத்தி, அதில் தங்கள் ஆயுதங்களைத் தொங்கவிடுவார்கள். அதற்கு “ஸாத் அன்வாத்” என்று சொல்லப்படும். நாங்கள் அந்த இலந்தை மரத்தைக் கடந்து சென்றபோது, நபி ﷺ அவர்களிடம்: “அல்லாஹ்வின் தூதரே! அவர்களுக்கு ஸாத் அன்வாத் இருப்பதைப் போன்று எங்களுக்கும் ஒரு ஸாத் அன்வாதை (வழிபாட்டிற்காக) நியமித்துத் தாருங்கள்!”

என்று கூறினோம். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்: “அல்லாஹு அக்பர்! நிச்சயமாக இது (முந்தைய சமூகங்களின்) வழிமுறைகள் (சுனன்)! என் உயிர் எவனுடைய கரத்தில் இருக்கிறதோ

அவன் மீது ஆணையாக! நீங்கள் (இவ்வாறு கூறியது), பனூ இஸ்ரவேலர்கள் மூஸாவிடம் (அலைஹிஸ்ஸலாம்) கூறியதைப் போன்றதுதான்:

மூஸாவே! அவர்களுக்குத் தெய்வங்கள் இருப்பதைப்போல் எங்களுக்கும் ஒரு தெய்வத்தை (நாங்கள் வணங்குவதற்கு) ஆக்கி வைப்பீராக (அல்குர்ஆன்: அல்-அஃராஃப் 7:138). (இதன் மூலம்,) நீங்கள் உங்களுக்கு முன் இருந்தவர்களின் வழிமுறையிலேயே நிச்சயம் பயணிப்பீர்கள்.”

فَإِذَا عَرَفْتَ هَذَا فَاعْرِفِ الْقَاعِدَةَ الرَّابِعَةَ.

**இதை நீர் அறிந்து விட்டால், இந்நான்காம் சட்டத்தையும் அறிந்துகொள்வீராக.**

## (நான்காம் சட்டம்) الْقَاعِدَةُ الرَّابِعَةُ

أَنَّ مُشْرِكِي زَمَانِنَا أَعْظَمُ شِرْكًا مِنَ الْأَوَّلِين. أَنَّ الكُفَّارَ الَّذِينَ قَاتَلَهُم رَسُولُ اللهِ ﷺ كَانُوا يُخْلِصُونَ فِي الشَّدَّةِ، وَيَنْسَوْنَ مَا يُشْرِكُون، وَالدَّلِيلُ قَوْلُهُ تَعَالَى:

முற்காலத்தில் வாழ்ந்த இணை வைப்பாளர்களை விடவும் நமது காலத்தில் வாழும் இணைவைப்பாளர்கள், இணைவைப்பில் மிகவும் மோசமான நிலையில் உள்ளனர். ஏனெனில் அல்லாஹ்வின் தூதர் ﷺ சண்டையிட்ட இணைவைப்பாளர்கள் (அவர்கள்) கஷ்ட காலத்தில் அல்லாஹ்வை மட்டுமே அழைப்பார்கள், இன்னும் அவர்கள் (உருவாக்கிய போலியான கடவுள்களைக் கொண்டு) செய்யும் இணைவைப்பை (அச்சமயத்தில்) மறந்துவிடுவார்கள்.

**இதற்கு ஆதாரம் உயர்ந்தோனாகிய அல்லாஹ்வின் கூற்று:**

﴿فَإِذَا رَكِبُوا فِى ٱلْفُلْكِ دَعَوُا ٱللَّهَ مُخْلِصِينَ لَهُ ٱلدِّينَ فَلَمَّا نَجَّىٰهُمْ إِلَى ٱلْبَرِّ إِذَا هُمْ يُشْرِكُونَ﴾ [العنكبوت: ٦٥]

மேலும், அவர்கள் கப்பல்களில் ஏறினால், அவர்கள் முற்றிலும் வணக்கத்தை அவனுக்கே கலப்பற்றதாக ஆக்கியவர்களாக அல்லாஹ்வை அழைக்கின்றனர். அவன் அவர்களைக் கரைக்குக் காப்பாற்றிச் சேர்த்ததும், அவர்கள் (மீண்டும்) இணைவைக்கத் தொடங்கி விடுகிறார்கள்." (அல்குர்ஆன்: அல்-அன்கபூத் 29:65).

وَأَهْلُ زَمَانِنَا هَذَا مُخْلِصُونَ فِي الشَّدَائِدِ بِالدَّعْوَةِ لِغَيْرِ اللَّهِ، فَإِذَا عَرَفْتَ هَذَا فَاعْرِف أَنَّ الْمُشْرِكِينَ الَّذِينَ فِي زَمَنِ النَّبِيِّ ﷺ وَقَاتَلَهُم أَهْوَنُ مِنْ مُشْرِكِي زَمَانِنَا؛ لِأَنَّهُم يُخْلِصُونَ فِي الشَّدَائِدِ، وَهَؤُلَاءِ يَدْعُونَ مَشَايِخَهُم فِي الشَّدَّةِ وَالرَّخَاءِ، وَاللَّهُ أَعْلَم.

(ஆகவே,) நீங்கள் இதை அறிந்து கொண்டால், அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் காலத்தில் வாழ்ந்தவர்களும், அவர்களால் போரிடப்பட்டவர்களுமான அந்த இணைவைப்பாளர்கள், நம் காலத்தில் வாழும் இணைவைப்பாளர்களை விட (இணைவைப்பில்) தீவிரம் குறைந்தவர்களாக (இலகுவானவர்களாக) இருந்தார்கள் என்பதை அறிந்துகொள்வீர். ஏனெனில், (நபி காலத்தவர்கள்) இக்கட்டான அல்லது துன்பமான நேரத்திலாவது அல்லாஹ்வை மட்டும் அழைத்து வணங்கினார்கள்; ஆனால், இக்காலத்தவர்களோ

தங்கள் குருமார்களையும் அவ்லியாக்களையும் துன்பத்திலும், மகிழ்ச்சியிலும் (எப்போதும்) அழைக்கிறார்கள் (இணைவைக்கிறார்கள்).

அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

**அல்லாஹுவே நன்கறிந்தவனாக இருக்கிறான்.**

@islamtamilinfo

Islam Tamil
இஸ்லாம் தமிழ்